www.Padasalai.Net www.TrbTnpsc.com

# தமிழ்

நேரம் : 3.00 மணி

## பகுதி - I

14 x 1 = 14

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்.
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) வினைத் தொகை ஆ) உரிச்சொல் தொடர் இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.
3. உவா உற வந்து கூடும் உடுபதி. இரவி ஒத்தார் - யார் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன், ஈ) இராமன், சவரி
4. சுரதா நடத்திய கவிதை இதழ் அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
5. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம்.
அ) நேரடி மறைமுக வேலைவாய்ப்புகளின் களம் ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ - அனைத்தும்.
6. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல். தொடர்களில் வெளிப்படும் செய்திகள்
1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள் 2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.
அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி
7. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர் அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர்
ஆ) மனத்திட்பம் உடையவர் இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர். ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்.
8. சிறு பாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதக மண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி
9. குறியீடுகளைப் பொருத்துக

| | |
|---|---|
| அ) பெண் | 1) சமாதானம் |
| ஆ) புறா | 2) வீரம் |
| இ) தராசு | 3) விளக்கு |
| ஈ) சிங்கம் | 4) நீதி |

அ) 2, 4, 1, 3 ஆ) 2, 4, 3, 1 இ) 3, 1, 4, 2 ஈ) 3, 1, 2, 4
10. படிமம் என்பதன் பொருள் அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி
11. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்கள் பொருந்துவதைத் தேர்க
அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்
ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்
இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்
ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்
12. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே ..................
அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை இ) விரவுத்திணை, அஃறிணை
ஈ) விரவுத் திணை, உயர்திணை
13. "குடும்பம்" எனும் சொல் முதன் முதலில் இடம்பெற்ற நூல் எது?
அ) தொல்காப்பியம் அ) திருக்குறள் இ) புறநானூறு ஈ) கலித்தொகை
14. ALLEGATION – கலைச் சொல் தருக.

## பகுதி – 2 பிரிவு – 1

**II. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 2 = 6

15. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது விளக்கம் தருக.
16. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுதீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
17. கீழ்நீர்க் குளித்தானைத் தீந்தொரீஇயற்று பொருள் கூறுக.
18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 x 2 = 4

19. இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?
20. "தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்" நூல் பற்றிக் குறிப்பு வரைக.
21. "புக்கில், தன்மனை" – சிறு குறிப்பு வரைக.

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 x 2 = 14

22. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
தலை, தளை, தழை (அல்லது) கலை, களை, கழை
23. <u>வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.</u>
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லவைவற்றை கற்றுக் கொடுக்கும்.
24. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக. அ) நல்லவை செய்யின் ......................
ஆ) அவமதிப்பும் ஆன்ற ..............................



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

அ) நிலைக்கு, சித்தமான காவலுக்குப் போவ சொல
ஆ) [illegible] வெள்ளையானை கொம்புத்தையை அடா எங்க இடைதுக்கு போனார்.
26. ஏதேனும் ஒன்றிற்குப் புணர்ச்சி விதி தருக. அ) உழவை (அல்லது) ஆ) உள்ளொன்று
27. ஏதேனும் ஒன்றிற்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) பழித்தனர் (அல்லது) ஆ) பொலிந்தான
28. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
[illegible] தோட்டப்புலத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.
29. [illegible] உத்தியின் அமைப்பை இலக்கணங்களை எழுதுக.
30. வேற்றுமை உருபுகளை இணைத்து முறையான தொடர்களாக ஆக்குக.
காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.

## பகுதி – 3 பிரிவு I

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. **2 x 4 = 8**

31. "பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்" என்று சிற்பி கூறுவதன் பொருள் யாது?
32. "ஈசன் மகன் நின்றனன் ஓர் ஏழையென ஓர் மின்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
33. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?
34. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

### பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. **2 x 4 = 8**

35. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
36. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
37. வேளாண் மேலாண்மை குறித்து நீவீர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
38. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

### பிரிவு – 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. **3 x 4 = 12**

39. அ) தொழில் உவமை அணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)
ஆ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும் - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.
40. இலக்கியம் நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
　　மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பர்
　　கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
　　செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங்காரர்
　　குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே

— திரிகூடராசப்பக் கவிராயர்

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) எறும்பு ஊரக் கல்லும் தேயும் (அல்லது) ஆ) ஊழி பெயரினும் தாம் பெயரார்.
42. தமிழாக்கம் தருக.
Popular as the ' Cultural Capital" of India . Tamil Nadu is extremely well known for its marvelous temples and other architectural gems. The State rose to prominence primarily because of its well – known and out standing Tanjore paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavour. In this traditional art form. Tanjore paintings look up to human figures, animals, floral motifs and birds as muses.
42. காதுகேளாதோருக்கான மாற்று வினா. கீழ்க்காணும் பத்தியைப் படித்து நான்கு வினாக்களை உருவாக்குக.
மொழி என்பது மக்கள் படைத்துக்காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகும். பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல் அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும்.
43. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – 4

அனைத்து வினாக்களுக்கும் விடையளி **3 x 6 = 18**

44. அ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க. (அல்லது)
ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.
45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக் காட்டி விளக்குக. (அல்லது)
ஆ) மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரையாக்குக.
46. அ) மகா நடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக. (அல்லது)
ஆ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

## பகுதி – 5

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. **4 + 2 = 6**
அ) "காய்நெல்" எனத் தொடங்கும் புறநானூறு பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) "மகற்கு" – என முடியும் குறட்பாவை எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com